TAMILNADU AGRO TRAINING CENTRE
An ISO 9001:2008 Certified Training Centre
108, Sholinghur Road,
PALLIPAT-631207
Tiruvallur Dist., (T.N.)

# சிறப்பாசிரியர் பணியிடங்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியல் வெளியீடு

சென்னை, ஜூலை 28: தையல், ஓவியம், உடற்கல்வி உள்ளிட்ட சிறப்பாசிரியர் பணியிடங்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியலை ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ளது. மாவட்ட வாரியான சான்றிதழ் சரிபார்ப்பு ஆகஸ்ட் 13 -ஆம் தேதி நடைபெறும் எனவும் வாரியம் தெரிவித்துள்ளது.

அரசு பள்ளிகளில் தையல், ஓவியம், உடற்கல்வி, இசை ஆகிய பாடங்களில் சிறப்பாசிரியர் பதவியில் 1,325 காலியிடங்களை நிரப்பும் வகையில், கடந்த 2017 -ஆம் ஆண்டு செப்டம்பர் 23 -ஆம் தேதி போட்டித்தேர்வு நடத்தப்பட்டது.

ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்திய இந்தத் தேர்வை 35,781 பேர் எழுதினர். இந்த நிலையில், தேர்வெழுதிய அனைவரின் மதிப்பெண்களும் ஜூன் 14 -ஆம் தேதி ஆசிரியர் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

இதையடுத்து சான்றிதழ் சரிபார்ப்பு பட்டியல் www.trb.tn.nic.in என்ற இணையதளத்தில் வெள்ளிக்கிழமை இரவு வெளியிட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து பணிநியமன அறிவிக்கையில் குறிப்பிட்டபடி, 'ஒரு காலியிடத்துக்கு 2 பேர்' என்ற விகிதாச்சார அடிப்படையில் சான்றிதழ் சரிபார்ப்புக்கு தேர்வர்கள் அழைக்கப்பட உள்ளனர்.

சான்றிதழ் சரிபார்ப்புப் பணி அனைத்து மாவட்டங்களிலும் ஆகஸ்ட் 13 -ஆம் தேதி நடைபெறும்.

சான்றிதழ் சரிபார்ப்பு முடிந்ததும் அடுத்த சில தினங்களில் பெயர், பதிவெண், எழுத்துத் தேர்வு மதிப்பெண், பதிவுமூப்பு மதிப்பெண், இடஒதுக்கீடு உள்ளிட்ட விவரங்களுடன் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும்.

அதைத்தொடர்ந்து, பணிக்கு தேர்வு செய்யப்பட்ட சிறப்பாசிரியர்களுக்கு பள்ளிக்கல்வித் துறை மூலம் ஆன்லைனில் கலந்தாய்வு நடத்தப்பட்டு பள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் பணிநியமன ஆணை வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

www.tnagro.in

TAMILNADU AGRO TRAINING CENTRE
19 MAR 2019
★ PALLIPAT-631207 ★

Scanned by CamScanner